**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 164/2022**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 ஆரோக்கிய ஸ்டீபன்ராஜ் திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 06.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) தாவா சொத்தைப் பொறுத்து 15 வருடமாக அனுபவம் செய்து வருவதன் அடிப்படையில் நான் உரிமை கொண்டாடுகிறேனா என்றால் எனது பாட்டனார் சொத்தாகும். எனது தாயார் ஜீவனாம்சம் வழக்கு குறித்து விபரங்கள் எனது தாயாருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். எனது தாயார் சாட்சியம் அளித்தால் தான் மேற்படி ஜீவனாம்சம் வழக்கு பற்றி தெரியும் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் வாதி குமரனுக்கு தாவா சொத்து அமைந்துள்ள இடம் தெரியாது என சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். அவர் தாவா சொத்திற்கு வந்ததே கிடையாது. அவ்வாறு நான் சொல்லும் நிலையில் வாதி தாவா சொத்தின் எனது சுவாதீனத்தை இடையூறு செய்ததாக சொல்வது பொய் என்றால் ஒரு முறை வந்து என்னிடம் தகராறு செய்தார். அதற்கு முன்போ, பின்போ வந்தது கிடையாது.

2) நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். பி.சா.ஆ.9 ஆவணத்தில் சொத்தின் சர்வே எண்.112/1ஏ என கண்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் சர்வே எண்.112/1ஏ 4 என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழக்கில் நாங்கள் சுவாதீனத்தில் இருப்பதாக சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். அ.வ.எண்.65/2008 வழக்கின் தீர்ப்புரையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.65/2008 வழக்கின் வழக்குரை, பதிலுரை ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.65/2008 வழக்கு சொத்தின் நாங்கள் சுவாதீனத்தில் இருப்பதாக சொல்லியிருந்தால் அந்த வழக்கில் மேற்படி சொத்தின் மீது பற்றுகை உத்தரவு ஏற்பட்டிருக்காது என்றால் அது பற்றி தெரியவில்லை.

3) பி.சா.ஆ.10 ஆவணத்தில் சொத்தின் சர்வே எண்.112/1ஏ என கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.65/2008 வழக்கை பற்றி எனது தாயாரிடம் இருந்து கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மேற்படி வழக்கில் எனது பெயர் ஆரோக்கிய தீபக் என கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 10 வகுப்பு படித்துள்ளேன். எழுத படிக்கத் தெரியும். எனது வழக்கில் விபரங்களை படித்து பார்த்து கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். அ.வ.எண்.65/2008 வழக்கின் தீர்ப்புரையில்

எனது தாயாருக்கு மாதம் ரூ.500ம், எனக்கும், எனது சகோதரருக்கும் தலா மாதம் ரூ.250ம் கொடுக்க வேண்டுமென தீர்ப்பாகி உள்ளது என்றும் அவ்வாறு கொடுக்க தவறும் பட்சத்தில் தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களில் ஜார்ஜ் பாத்தியத்தை ஒப்படைக்க வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) இவ்வழக்கு சொத்து சர்வே எண்.112/1ஏ 4 என்பது 2001ம் வருடமே உட்பிரிவு ஆகிவிட்டது என்றால் சரிதான். சரியான சர்வே எண் கொடுக்காமல் மேற்படி வழக்கு தாக்கல் செய்ததால் அந்த வழக்கின் தீர்ப்பு பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனது தாயார் எழுத படிக்க தெரியாதவர். அவ்வாறு தவறு ஏற்பட்டது. 2008ம் வருடத்திற்கு பிறகு எனது தகப்பனார் வெளியூரில் வசித்து வந்தாரா என்றால் பக்கத்து ஊரான கீழவெளியூரில் இருந்தார். நான் தாக்கல் செய்த அ.வ.எண்.65/2023 வழக்கில் எனது தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கு எந்த முகவரியில் அழைப்பாணை அனுப்பினேன் என்றால் நான் இருக்கும் ஊரான கீழ வெளியூர் அஞ்சல், நெல்லூர்பட்டிக்கு அனுப்பினேன்.

5) மேற்படி முகவரியில் தான் எனது தகப்பனார் 2008ம் வருடத்திலிருந்து வசித்து வருகிறாரா என்றால் ஆமாம். தற்போது நான், எனது தாயார் மற்றும் தகப்பனார் அனைவரும் ஒன்றாக ஒரே குடும்பமாக வசிக்கிறோமா என்றால் இல்லை, தனித்தனியாக வசிக்கிறோம். நான் எனது தாயார் தனியாக இருக்கிறோம். எனது தகப்பனார் அவருடைய தாயாருடன் இருக்கிறார். நான் சொல்வது தவறு என்றும் நான் எனது தாயார் மற்றும் தகப்பனார் அனைவரும் ஒன்றாக ஒரே விலாசத்தில் வசிப்பதால் தான் எனது வழக்குரையில் ஒரே முகவரியில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அனைவரும் ஒரே ஊரில் தனித்தனியாக வசிக்கிறோம்.

6) ஜார்ஜ் பாத்தியம் என்ன என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது தாயாருக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது தாயாரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எனது வழக்குரையில் அ.வ.எண்.65/2008 வழக்கு பற்றியும், ஜார்ஜ் பாத்தியம் என்பது பற்றியும் எனக்கு தெரியாது என சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. அனுபவ பாத்தியம் என்பது எனக்கு தெரியுமா என்றால் எனது பாட்டனார் சொத்து அதை தான் நாங்கள் அனுபவம் செய்கிறோம். எனது தகப்பனார் மற்றும் அவரது சகோதரர் பெயரில் பட்டா, சிட்டா உள்ளது. எனது பாட்டனார் சொத்து அவர் இறந்த பின்னிட்டு எனது தகப்பனாருக்கும், எனது தகப்பனாருக்கு பின்னிட்டு எனக்கும் அனுபவ பாத்தியம் வரும் என்றால் சரிதான்.

7) எனது தகப்பனார் இறந்த பின்னிட்டு தான் எனக்கு அனுபவ பாத்தியம் வரும் என்றால் சரிதான். அ.வ.எண்.65/2008 வழக்கு எங்களுக்கு சாதகமாக முடிந்தது பற்றி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏதாவது ஆட்சேபணை மனு கொடுத்தோமா என்றால் எனது தாயாருக்கு தான் தெரியும். எனது தாயார் ஆட்சேபணை மனு கொடுத்திருப்பதாக என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட ஆவணங்கள் பற்றியும், அதில் உள்ள விபரங்கள் பற்றியும் எனக்கு தெரியுமா என்றால் ஒரு சிலது பற்றி தெரியும். பிரதிவாதிகள் 2012 ம் வருடத்திற்கு பின்னிட்டு கிரையம் வாங்கியது சம்பந்தமாக எனது தாயார் ஏதாவது சட்ட நடவடிக்கை எடுத்தாரா என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக சொன்னார். எப்போது அனுப்பினார் என்றால் 2012 ம் வருடமே அனுப்பியதாக சொன்னார்.

8) பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய பின்னிட்டு வருவாய்த்துறையில் இருந்து இடத்தை பார்க்க வந்தார்களா என்றால் யாரும் வரவில்லை. 2008 ம் வருடம் வழக்கு நடந்தது பற்றி தெரியுமா என்றால் ஒரு சிலது தெரியும். சிவக்குமாருக்கு எழுதிக்கொடுத்த பி.சா.ஆ.4 ஆவணத்தை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். பொதுவாக ஒரு இடத்தை கிரையம் செய்யும் போது குறைவாக முத்திரைத்தாள் செலுத்தினால் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து முத்திரை வசூலிப்பவர் இடத்திற்கு வந்து பார்வையிட்டு சரியான தொகையை நிர்ணயம் செய்வார்கள் என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ஆவணத்தில் குறைவான முத்திரை தொகை செலுத்தப்பட்டதால் ரூ.43560 வசூலிக்கப்பட்டதாக கண்டுள்ளது என்றால் அதில் அவ்வாறு தான் உள்ளது. ஆனால் யாரும் இடத்தை வந்து பார்க்கவில்லை.

9) 2008, 2009 ம் வருடத்தில் எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. தற்போது எனக்கு 28 வயது என சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். 2008, 2009 ம் வருடத்தில் எனக்கு 10, 11 வயது இருக்கும் என்றும் வழக்கிற்காக தெரியவில்லை என கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நேரில் வந்து 2009 ம் வருடம் பார்வையிட்டார்களா என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 ஆவணத்தில் குறைவான முத்திரை தொகையை வசூல் செய்ய வேண்டுமென்று இடத்தை வந்து பார்வையிட்டார்களா என்பதை பொறுத்து முத்திரை தாள் வசூலிப்பவர் அலுவலகத்தில் இருந்து ஆவணங்களை வரவழைத்து விசாரணை செய்வதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை.

10) நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்குரையின் சங்கதிகளுக்கும், நிரூபண வாக்குமூலத்தில் உள்ள

சங்கதிகளுக்கும் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தில் தகுந்த மறுபயன் கொடுத்து முறையாக கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நானோ, எனது தாயாரோ சுவாதீனத்தில் இருப்பதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அடங்கல் கணக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.8 ல் சாகுபடி அடங்கலில் 1ம் பிரதிவாதி பீட்டர் பெயரில் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான்.

11) தாவா சொத்தைப் பொறுத்தவரை அடங்கலில் பெயர் மாற்றம் செய்யக்கூடாதென வட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பி.சா.ஆ.8 ஆவணத்தில் எந்த வகையில் வாங்கினேன் என்றால் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்து வாங்கினேன். எவ்வாறு மனு கொடுத்தேன் என்றால் நான் பீட்டர் மகன் என்றும், எனக்கு அடங்கல் வழக்கிற்காக வேண்டுமென மனு கொடுத்தேன். பீட்டர் ராஜ் பெயரில் உள்ள அனுபவத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோமா என்றால் ஏற்றுக்கொள்கிறோம். பீட்டர் ராஜ் சொத்தை விற்பனை செய்யக்கூடாதென நீதிமன்றத்தில் உத்தரவு கொடுத்துள்ளார்களா என்றால் ஜார்ஜ் பாத்தியத்தை கொடுத்துள்ளார்கள். விற்பனை செய்யக்கூடாதென குறிப்பிட்டு உத்தரவு இல்லை என்றால் சரிதான்.

12) பி.சா.ஆ.9 ஆவணத்தின்படி எனது தகப்பனார் ஜீவனாம்ச தொகை கொடுக்கவில்லை என்றால் நீதிமன்றத்தை அணுகி சொத்தின் மீது ஜார்ஜ் பாத்தியத்தை ஏற்படுத்தலாம் என்றால் சரிதான். எனது வழக்குரையில் எனது தகப்பனார் ஜீவனாம்ச தொகை கொடுக்கவில்லை என சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எனது வழக்குரையில் 2008ம் வருடம் முதல் 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்திலிருந்து வெளியேறி விட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2008 முதல் நாங்கள் தான் தாவா சொத்தை அனுபவம் செய்கிறோம். நாங்கள் அனுபவம் செய்து வருவதாக சொல்லும் சொத்திற்கு எங்கள் பெயரில் பட்டா, சிட்டா ஆகியவற்றை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை. எனது வழக்கறிஞர் 2011ல் அ.வ.எண்.65/2008 வழக்கின் தீர்ப்பே போதும் என சொல்லிவிட்டார்.

13) உண்மையில் தாவா சொத்தின் அனுபவத்தில் நாங்கள் இருந்திருந்தால் வருவாய்த்துறை ஆவணங்களை எங்கள் பெயருக்கு மாற்ற நடவடிக்கை எடுத்திருப்போம் என்றும் அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அனுபவ பாத்தியம் என நான் வழக்குரையில் சொல்லியுள்ள நிலையில் தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என உரிமை கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரிதான். 15 வருடமாக தாவா சொத்தில் அனுபவத்தில் இருப்பதாக சொல்லும் போது எந்த தேதியில் இருந்து அவ்வாறு அனுபவத்தில் இருப்பதாக தேதி குறிப்பிட வேண்டும்

என்றால் தேதி ஞாபகம் இல்லை. எதிரிடை அனுபவ பாத்தியம் கோரும் நிலையில் தாவா சொத்தின் உரிமையாளர் யார் என சொல்ல வேண்டுமென்றால் சரிதான். தாவா சொத்திற்கு யார் உரிமையாளர் என்றால் பீட்டர் ராஜ் உரிமையாளர்.

14) தாவா சொத்தின் உரிமையாளர் பீட்டர் ராஜ் என்பதால் அவருக்கு மேற்படி சொத்தில் வில்லங்க படுத்த உரிமை உள்ளது என்றால் சரிதான். எதிரிடை அனுபவ பாத்தியம் கோரும் நிலையில் அதற்கான நீதிமன்ற கட்டணம் செலுத்த நடவடிக்கை எடுத்தேனா என்றால் வழக்கறிஞரிடம் தான் கேட்க வேண்டும். பிரதிவாதிகள் பெயரில் உள்ள கிரைய ஆவணங்கள் குறித்து எனக்கு எப்போது தெரியும் என்றால் நான் தாவா சொத்தில் ஆழ்துளை கிணறு அமைக்கும் போது பிரதிவாதி குமரன் சொத்தை கிரையம் வாங்கியிருப்பதாக அங்கு பிரச்சனை செய்தார். அப்போது தான் தெரியும். நான் சொல்வது தவறு என்றும் குமரன் தான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

15) அன்பழகன், சிவக்குமார், உஷாராணி, தனமேரி ஆகியோர்கள் பெயரில் இருந்த ஆவணங்கள் பற்றி எனக்கு 2012ம் ஆண்டு தெரியுமா என்றால் தெரியும். 2023ம் வருடம் குமரன் என்னிடம் பிரச்சனை செய்தது குறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. அவர் தான் கொடுத்தார். உண்மையில் பிரச்சனை நடந்திருந்தால் நான் புகார் கொடுத்திருப்பேன் என்றும் நான் சொல்வது போல பிரச்சனை எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. ஆழ்துளை கிணறு அமைக்க அனுமதி ஏதாவது வாங்கியுள்ளேனா என்றால் அவ்வாறு அனுமதி வாங்கும் பழக்கம் இல்லை. ஆழ்துளை கிணறை பொறுத்து அனுமதி பெற்றிருந்தால் தான் எந்த சர்வே எண்ணில் ஆழ்துளை கிணறு அமைந்துள்ளது என்பதை அறிய முடியும் என்றால் சரிதான். கிராமத்தில் அவ்வாறு அனுமதி வாங்கும் பழக்கம் இல்லை.

16) சட்டத்தைப் பொறுத்து அனுமதி பெற வேண்டியது அவசியம் என்றால் எங்கள் கிராமத்தில் யாரும் அனுமதி வாங்கவில்லை. வாங்கியிருந்தால் எனக்கு தெரிந்திருக்கும். வழக்குரையில் சர்வே எண்.112/1ஏ4 என எதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனது பாட்டனார் சொத்து எனது தகப்பனார் பெயரில் உள்ளது. மேலும் 2008ல் ஜார்ஜ் பாத்தியத்தில் ஏற்பட்டுள்ளது. பி.சா.ஆ.10 ஆவணத்தில் வழக்கு எண் பற்றி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை வழக்கு நடப்பதாக சொல்லியுள்ளேன். பி.சா.ஆ.10 பொது அறிவிப்பை பொறுத்து எந்தெந்த ஊரில் கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியவில்லை. அ.வ.எண்.65/2008 முடிவுக்கு பின்னிட்டு ஏதாவது பொது

அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. எந்த பிரச்சனையும் இல்லாததால் கொடுக்கவில்லை.

17) அ.வ.எண்.65/2008 வழக்கின் தீர்ப்பிற்கு பின்னிட்டு அறிவிப்போ அல்லது சார்பதிவாளர் அலுவலத்தின் ஆட்சேபணையோ செய்திருந்தால் பிரதிவாதி குமரன் தாவா சொத்தை கிரையம் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது என்றால் எந்த பிரச்சனையும் இல்லாததால் அறிவிப்போ, ஆட்சேபணையோ செய்யவில்லை. அறிவிப்போ, ஆட்சேபணையோ செய்யாதது எனது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து தற்போது எவ்வளவு மதிப்பு என்றால் அது பற்றி தெரியவில்லை. அடங்கல் யார் பெயரில் உள்ளதோ அவர்கள் தான் அனுபவத்தில் இருக்கிறார்கள்என்றால் சரிதான். எனது தகப்பனார் ஏதாவது விற்பனை செய்திருந்தால் கிரையம் வாங்கியவர்கள் தான் அனுபவத்தில் இருப்பார்கள் என்றால் சரியல்ல.

18) எனது தகப்பனாருக்கு தாவா சொத்தை விற்பனை செய்ய முழு உரிமையும் உண்டு என்றும் கிரையம் பெற்றவர்கள் பெயர் வருவாய்த்துறை ஆவணத்தில் பதிவேற்றம் செய்யப்படவில்லை என்றாலும் அவர்கள் தான் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. 20.02.2023 தேதியில் தான் பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததாகவும் அதன் பின்னிட்டு தான் எனக்கு பிரதிவாதிகளை தெரியும் என எனது வழக்குரை பத்தி 14 ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 16.11.2022 லியே நான் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.3 அறிவிப்பில் பிரதிவாதிகளின் கிரைய ஆவணங்கள் பற்றி எனக்கு எப்போது தெரிய வந்தது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

19) 2022 ம் வருடம் 11 ம் மாதமே எனக்கு பிரதிவாதியை பற்றி தெரிந்து இருந்தும் இவ்வழக்கில் சேர்த்துள்ள அரசு அலுவலர்களுக்கு முன்கூட்டியே கொடுக்க வேண்டிய அறிவிப்பை கொடுக்க எனக்கு போதிய அவகாசம் இருந்தும் இவ்வழக்கில் அவ்வாறு அறிவிப்பு எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 அறிவிப்பில் வழக்கு தாக்கல் செய்யப்போவதாக எந்த ஒரு சங்கதியும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.3 அறிவிப்பின் சொத்து விபரத்தில் நான்கெல்லை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் எப்போதும் சுவாதீனத்தில் இருக்கவில்லை என்றும் எனது தகப்பனார் பீட்டர் தான் சுவாதீனத்தில் இருந்தார் என்றும் அவரிடம் இருந்து பிரதிவாதி குமரன் முறையாக கிரையம் பெற்று தற்போது அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

**வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Sd/–R. தமிழரசி**
**Principal District Munsif,**
**Kulithalai.**